சூத்திரம்
www.sooddram.com
The Formula

செய்திகள் | கட்டுரைகள் | வடக்கு கிழக்கு மாகாணத்தில் | எழுத்துரு | Contact us at: sooddram@gmail.com

~~ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறுதிப் பெரும்பான்மை பெற்றது! ஜனநாயக~~

சூத்திரம்
முதற்பக்கம்
FONTS/எழுத்துரு
சர்வதேச நேரம்
தொடர்புகளுக்கு
கட்டுரைகள்
பொதுவிடயம்
அரசியல் சமூக ஆய்வு
இலங்கைத் தமிழர் போராட்டம்
இலங்கையில் உள்ள ஏனைய அரசியல் அமைப்புகள்
சர்வ தேச அரசியல்
அரசியல் தீர்வு
கவிதைகள்
சமூக விழிப்பு
போராட்டம்
பொது விடயம்
புகைப்படங்கள்
எமது வாழ் நிலங்கள்
போராட்டங்கள்
போராட்ட தடயங்கள்
இணையத்தளங்கள்
கண்ணோட்டம்
பூந்தளிர்
தூ
தேனி

# 1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

***நடந்த வன்கொடுமைகள்! (பகுதி 33)***

(கிறேசியன், நாவாந்துறை)

மறுநாள் காலையில் எனது உறவினரான முதலாளியிடம் செல்வதென்று தீர்மானித்து அன்று இரவு முழுவதும் விழித்துக்கொண்டே கனவுகளுடன் உறவாடிக் கொண்டிருந்தேன். காலையில் உடலுக்கு நல்லெண்ணை தேய்த்து, சீயக்காய் வைத்து முழுகினேன். காலை உணவை முடித்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தேன் எனது உறவினர் வீட்டுக்கு. எனது உறவினரான வில்சன் அவர்களைச் சந்தித்தேன். அவர் பல தடவைகள் புலிகளது அலுவலகம் சென்று எனது விடுதலைக்காகப் பலதரப்பட்ட தொல்லைகளை புலி விலங்குகளுக்குக் கொடுத்ததைப் பற்றிய விபரங்களைக் கூறினார். புலிகள் அவரை மிரட்டியது பற்றியும், அதற்கு அவர் பயந்துவிடவில்லை என்பதையும் தெளிவாகக் கூறினார். அத்துடன் தனக்கு இந்தத் தொழிலில் விருப்பம் இல்லை என்றும் இதைவிட்டுவிட்டு வெளிநாடு செல்லப்போவதாகவும், எனவே இந்தத் தொழிலை என்னிடம் ஒப்படைப்பதாகவும் கூறினார்.

குறைந்தது நான்கு மாதங்களில் அவரது பயணம் உறுதியானதும் தனது அனைத்துத் தொடர்புகளையும் உபகரணங்களையும் என்னிடத்தில் ஒப்படைத்தார். அவரை வழியனுப்பிவிட்டு அந்தத் தொழிலை நான் ஆரம்பித்தேன். என் கீழ் எண்பது பேர் வரை பணி செய்தனர். எனக்குக் கிடைத்த வருமானத்தை சரி சமமாகப் பங்கிட்டுத் தொழிலாளர்களுக்குக் கொடுத்து வந்தேன். இரண்டரை ஆண்டுகள்

**உனக்கு நாடு இல்லை என்றவனைவிட நமக்கு நாடே இல்லை என்றவனால்தான் நான் எனது நாட்டை விட்டு விரட்டப்பட்டேன்.......**



ராஜினி திரணகம
MBBS(Srilanka)
Phd(Liverpool, UK)

**“அதிர்ச்சி ஏற்படுத்தும் சாமர்த்தியம் விடுதலைப்புலிகளின் வலிமை மிகுந்த ஆயுதமாகும்.** விடுதலைப்புலிகளுடன் நட்பு பூணுவது என்பது வினோதமான சுய தம்பட்டம் அடிக்கும் விவகாரமே. விடுதலைப்புலிகளின் அழைப்பிற்கு உடனே செவிமடுத்து, மாதக்கணக்கில்

| |
|---|
| ஈழச் சுவர் |
| தமிழ் நியூஸ் வெப் |
| பத்மநாபா |
| மலையகம் |
| பார்வை |
| அலை |
| தாயகம் |
| ஈழநாசம் |
| நெருப்பு |
| அதிரடி |
| அதிரடி மீடியா |
| ஈ.பி.ஆர்.எல்.எவ். |
| ஆனந்தசங்கரி |
| விழிப்பு |
| ரெலோ நியூஸ் |
| உதயம் |
| தேனகம் |
| புளொட் |
| ஈபிஆர்எல்எவ் வெப் |
| விடிவெள்ளி |
| எங்கள் பூமி |
| இலங்கை கம்யூனிஸ்ட் |
| எங்களைப்பற்றி |
| General |

சிறப்பாக இந்தத் தொழிலை நடத்தினேன். வில்சன் அவர்களிடமிருந்த தொழிலாளர்களை விட இரண்டு மடங்கு தொழிலாளர்கள் என்னுடன் இணைந்தனர். இந்தக் காலகட்டத்தில் பல தடவைகள் புலிகள் என்னிடம் வந்து தங்கள் இயக்கத்தில் இணைந்து செயல்படும்படி வற்புறுத்தினர்.

நான் இவர்களிடம் பட்ட அனுபவங்களை எந்தக் காலத்திலும் மறக்க முடியாது. இப்படியான ஓர் கொடியவர்கள் திரைமறைவில் செய்துவரும் அநியாயங்களை ஒரு காலத்தில் எங்கள் மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காண்பிக்க வேண்டும் என்று அப்போதே நினைத்திருந்தேன். உலகின் வேறு நாடுகளில் பலதரப்பட்ட கொடுமைகள் நடந்ததாக நாம் படித்துத் தெரிந்துகொண்டிருக்கிறோம். ஆனால் நான் அவற்றை நேரில் அனுபவித்தவன், அதிலும் எதிரிகளிடம் அகப்பட்டு இந்த வதையைச் சந்திக்கவில்லை. உரிமை வேண்டும், விடுதலை வேண்டும் என்று கோரிக்கை வைத்துப் போராடப் புறப்பட்டவர்கள், தமிழர்களின் உரிமையை எப்படியெல்லாம் மதித்தார்கள் இந்த இயக்கத்தினர் என்பதை நேரில் கால் விலங்குடன் நாற்பது மாதங்கள் வாழ்ந்து அனுபவித்த வரலாற்றை மறந்து இந்தக் கொடியவர்களின் இயக்கத்தில் இணைந்தால் நான் ஓர் சூடு சொரணையற்ற சந்தர்பவாதியாகத்தான் இருக்க முடியும்.

இவர்கள் என்னைத் தொடர்பு கொள்ளும் போதெல்லாம் ஏதாவது காரணம் சொல்லித் தட்டிக் கழித்து வந்தேன். நான் சார்ந்த இயக்கமான ஈ.என்.டி.எல்.எப் இந்தியாவில் தமிழ் அகதிகள் குழந்தைகளுக்கென்று பாடசாலை ஒன்றை இலவசமாக நடத்திவருவதை அறிந்திருந்தேன். நான் எப்படியாவது இந்தியா சென்று எங்கள் இனத்துக்கான ஏதாவது ஓர் நற்பணியில் ஈடுபடவேண்டும் என்று தீர்மானித்திருந்தேன். அதற்கான நேரத்தையும் எதிர்பார்த்திருந்தேன்.

1995ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் புலிகள் யாழ்ப்பாணத்தை விட்டு யாருக்கும் தெரியாமல் தப்பித்து வன்னிக்கு ஓடினர். தமிழ் மக்களைக் காப்பாற்ற புறப்பட்ட வீரர்கள், மக்களைக் கைவிட்டு விட்டு தாங்களும் தங்கள் குடும்பங்களும் யாருக்கும் தெரியாமல் வன்னிக்குச் சென்றுவிட்டனர். ஒருவார காலம் இப்படித் தாங்கள் மட்டும் தப்பித்தபின் மக்களுக்கு அறியப்படுத்துகின்றனர். 28ம் திகதி மதியம் ஒலிபெருக்கி மூலம் திடீரென யாழ்ப்பாண மக்களை வெளியேறும்படியும், இராணுவம் முன்னேறி வந்துகொண்டிருக்கிறதென்றும் மக்களை மிரட்டி, விரட்டினர். துணி மூட்டைகளுடன் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்தனர் தங்கள் வாழ்விடங்களைவிட்டு.

நானும் எனது உறவினர்களும் நான்குமணியளவில் கச்சேரியடியை அடைந்தோம், மறுநாள் காலை நான்கு முப்பது மணிக்குத்தான் நாவற்குழிப்

அவர்களின் குழுக்களில் இருந்து ஆலோசனை வழங்கி, கடிதங்கள் வரைந்து, கூட்டங்களில் பேசித்திரிந்து, அவர்களுக்கு அடிவருடிகளாக இருந்தவர்கள்மீது கூட சூசகமான எச்சரிக்கைகள், காலப்போக்கில் அவர்கள்மீது சந்தேகம் கொண்டு விடப்பட்டன………”

(முறிந்த பனை நூலில் இருந்து)

(இந் நூலை எழுதிய ராஜினி திரணகம விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முக்கிய உறுப்பினரான பொஸ்கோ என்பவரால் 21-9-1989 அன்று யாழ் பல்கலைக்கழக வாசலில் வைத்து சுட்டு கொல்லப்பட்டார்)

Its capacity to shock was one of theL.T.T.E'smost potent weapons. Friendship with theL.T.T.E. was a strange and self-flattering affair.In the course of the coming days dire hints were dropped for the benefit of several old friends who had for months sat on committees, given advice, drafted latters, addressed meetings and had placed themselves at the L.T.T.E.'s beck and call.

From: Broken Palmyra

***இலங்கையின் 7 வது பாராளுமன்றத் தேர்தல்!***
நடக்கும் என்றார் நடந்து விட்டது! நடக்காது என்றார் இனி நடந்துவிடுமா?

பாலத்தைக் கடந்தோம். மூன்று கிலோ மீற்றர் தூரத்தைக் கடக்க பன்னிரெண்டு மணி நேரம் எடுத்துக்கொண்டது. உறவினர்கள் தங்கள் உறவுகளை இந்தப் பாலத்துக்குள் தொலைத்துவிட்டு அலைந்தனர். கைத்தடியைத் தாண்டியதும் பலரும் தங்கிவிட்டனர். எனது கணிப்பின்படி அன்று இடம்பெயர்ந்தவர்கள் ஐந்தரை முதல் ஆறு லட்சம்பேர் வரை இருக்கும்.

தமிழர்களின் பூர்விக நிலத்தைவிட்டு வெளியேற்ற வேண்டும் என்று நினைத்த புலிகளது கொள்கை மிகவும் தவறானது. இந்தப் பூர்விகப் பிரதேசத்தைக் காப்பாற்ற முடியாது என்றால் எதற்காக சக போராளி இயக்கங்களை அழித்தார்கள். இவர்களது இயலாமை அன்றே வெளிப்பட்டது. ஆனால் இவர்களது பிரசாரம் அந்த இயலாமையை மறைத்து வீரர்களாகக் காட்டியது.

நாங்கள் நாவற்குழியிலிருந்து கிளாலி வழியாக பூநகரியின் நல்லூரை அடைந்தோம். கிளாலியிலிருந்து நல்லூருக்குப் படகுகள் மூலம் சென்றோம். ஒரு விசைப் படகு ஆறு படகுகளை இழுத்துச் செல்லும். இப்படி இந்த நீர் நிலையைக் கடப்பதற்கு தலைக்கு 50 ரூபா முதல் 100 ரூபா வரை பணம் பறித்துக்கொண்டுதான் இந்த வேலையைச் செய்தனர் புலிகள்.

இரண்டாவது நாள் குஞ்சு பரந்தன் வழியாக வட்டக்கச்சியை அடைந்தேன். புதிய இடம், வாழ்க்கை மாறுபட்ட திசைக்குச் செல்லத் தொடங்கியது. ஓராண்டு காலம் விடலைத்தீவு, கள்ளியடி, நாச்சிக்குடா ஆகிய பகுதிகளில் வாழ்க்கையை மாற்றி மாற்றி வாழ்ந்து பார்த்து இறுதியாக வலைப்பாட்டிலிருந்து இந்தியாவுக்குச் செல்வதற்கான வாய்ப்பினைப் பெற்றேன்.

(தொடரும்…)

(சாகரன்)

வெல்லப்போவது யார்….? பாராளுமன்றத் தேர்தல் 2010

(சாகரன்)

*பாராளுமன்றத் தேர்தல் 2010*

தேர்தல் விஞ்ஞாபனம் - *பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி*

1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்……

*நடந்த வன்கொடுமைகள்!*
(கிறேசியன், நாவாந்துறை)

***சமரனின் ஒரு கைதியின் வரலாறு***

*“ஆயுதங்கள் மேல் காதல் கொண்ட மனநோயாளிகள்.”*
**வெகு விரைவில்…**

மீசை வைச்ச சிங்களவனும் ஆசை வைச்ச தமிழனும்

(சாகரன்)

*இலங்கையில்*

‘இராணுவ’ ஆட்சி வேண்டி நிற்கும் மேற்குலகம், துணை செய்யக் காத்திருக்கும் சரத் பொன்சேகா கூட்டம்

(சாகரன்)

*ஜனாதிபதி தேர்தல்*

எமது தெரிவு எவ்வாறு அமைய வேண்டும்?

-பத்மநாபா ஈபிஆர்எல்எவ்

*ஜனாதிபதித் தேர்தல்*

ஆணை இட்ட அதிபர் 'கை', வேட்டு வைத்த ஜெனரல் 'துப்பாக்கி' ….. யார் வெல்வார்கள்?

(சாகரன்)

சம்பந்தரே! உங்களிடம் சில சந்தேகங்கள்.

(சேகர்)

அனைத்து இலங்கைத் தமிழர்களும் ஒற்றுமையான இலங்கை தமது தாயகம் என மனப்பூர்வமாக உரிமையோடு உணரும் நிலை ஏற்பட வேண்டும்.

(அ. வரதராஜப்பெருமாள்)

*தொடரும் 60 வருடகால காட்டிக் கொடுப்பு*

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பாடம் புகட்டுவார்களா?

(சாகரன்)

***ஜனவரி இருபத்தாறு!***

விரும்பியோ விரும்பாமலோ இரு கட்சிகளுக்குள் ஒன்றை தமிழ் பேசும் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்…..?

(மோகன்)

2009 விடைபெறுகின்றது! 2010 வரவேற்கின்றது!!

*'ஈழத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பாசிசத்தின் உதிர்வும், ஜனநாயகத்தின் எழுச்சியும்'*

(சாகரன்)

*சபாஷ் சரியான போட்டி.*

மகிந்த ராஜபக்ஷ **Vs** சரத் பொன்சேகா.

(யஹியா வாஸித்)

கூத்தமைப்பு கூத்தாடிகளும் மாற்று தமிழ் அரசியல் தலைமைகளும்!

(சதா. ஜீ.)

*தமிழ் பேசும் மக்களின் புதிய அரசியல் தலைமை*

மீண்டும் திரும்பும் 35 வருடகால அரசியல் சுழற்சி! தமிழ் பேசும் மக்களுக்கு விடிவு கிட்டுமா?

(சாகரன்)

கப்பலோட்டிய தமிழனும், அகதி (கப்பல்) தமிழனும்

(சாகரன்)

*சூரிச் மகாநாடு*

(பூட்டிய) இருட்டு அறையில் கறுப்பு பூனையை தேடும் முயற்சி

(சாகரன்)

பிரிவோம்! சந்திப்போம்!! மீண்டும் சந்திப்போம்! பிரிவோம்!!

(மோகன்)

*தமிழ் தேசிய கூட்டமைப்புடன் உறவு*

பாம்புக்கு பால் வார்க்கும் பழிச் செயல்

(சாகரன்)

இலங்கை அரசின் முதல் கோணல் முற்றும் கோணலாக மாறும் அபாயம்

சாகரன்

ஈழ விடுலைப் போராட்டமும், ஊடகத்துறை தர்மமும்
- சாகரன்

*அடுத்த கட்டமான அதிகாரப்பகிர்வு முன்னேற்றமானது 13வது திருத்தத்திலிருந்து முன்னோக்கி உந்திப் பாயும் ஒரு விடயமே*

- அ.வரதராஜப்பெருமாள்

***மலையகம் தந்த பாடம்***

வடக்கு கிழக்கு மக்கள் கற்றுக்கொள்வார்களா? - சாகரன்

*ஒரு பிரளயம் கடந்து ஒரு யுகம் முடிந்தது போல் சம்பவங்கள் நடந்து முடிந்துள்ளன.!* - அ.வரதராஜப்பெருமாள்

**அமைதி சமாதானம் ஜனநாயகம்**
www.sooddram.com